மலேசியத் தமிழ் நாளிதழ்களில் முதல் இடம் வகிப்பது

# மலேசிய நண்பன்

மக்கள் ஏடு HARIAN TAMIL MALAYSIA NANBAN PP 11862/12/2012

குடும்பம் 40 - நண்பன் 678/ திருவள்ளுவர் ஆண்டு 2056 / விசுவாவசு ஆண்டு / ஆவணி 7
ஹிஜ்ரி 1447 / ஸபர் 28 / சனிக்கிழமை 23-8-2025 / HARIAN TAMIL MALAYSIA NANBAN

வெள்ளி 1.70




2 ஆவது பிரேத பரிசோதனை நடத்துவதற்காக

## மகனின் உடலை தோண்டியெடுக்க அனுமதிப்பீர்

### ஏ.ஜி.சி. யிடம் உமு ஹைமான் கோரிக்கை

(ஆர். குணா)

புத்ராஜெயா, ஆக. 23- மாணவர்களின் பகடிவதை மற்றும் மர்மமான மரணச் சம்பவங்கள் தற்போது நாட்டில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தி வரும் நிலையில், தம் மகனின் மரணத்திற்கான காரணம் தெரியாமல் ஒரு தாய் பரிதவிக்கின்றார். அதே சமயம், மகனின் உடலை தோண்டியெடுத்து இரண்டாவது பிரேத பரிசோதனை நடத்தும் தமது கோரிக்கை எந்தவித இடையூறும் இன்றி நிறைவேற்றப்பட வேண்டும் என அவர் வலியுறுத்துகிறார்.

கடந்த ஜூலை மாதம் பயிற்சியின்போது மரணமடைந்த 22 வயது மாணவர் ஷம்சுல் ஹாரிஸ் ஷம்சுடினின் தாயார் உமு ஹைமான் பீ டாவ்லாட்குன் (45), தமது இந்த கோரிக்கையை முன்வைத்து மனு ஒன்றை நேற்று புத்ராஜெயாவில் சட்டத்துறை தலைவர் அலுவலகத்தில் (ஏ.ஜி.சி.) சமர்ப்பித்தார். அவரின் மனுவை அதன் பொது உறவு அதிகாரி ஹாஜி அப்துல் அஜிஸ் பெற்றுக்கொண்டார். நேற்று பகல் 3.30 மணியளவில் இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டது.

மலேசிய தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் ரிசர்வ் அதிகாரிக்கான பயிற்சியில் ஈடுபட்டிருந்த சமயம் என் மகன் ஷம்சுல் இறந்து விட்டதாக கூறுகிறார்கள். ஆனால் அவனின் மரணத்திற்கு உண்மையான காரணம் என்ன என்பது எனக்குத் தெரிய வேண்டும் என்பதற்காக அவனின் உடலை தோண்டியெடுத்து இரண்டாவது பிரேத பரிசோதனையை நடத்தும் மனுவை நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறோம்.

பக்கம் 15



பக்கம் 15

மாற்றுத் தொழிலாளர்களை அமர்த்த அனுமதி தந்தால் எங்கள் சுமை பெருமளவில் குறையும்

வயது வரம்பை அதிகரிக்க வேண்டும் என்று நாங்கள் கேட்பது ஏன்?

செலவினங்களை தாங்க முடியாவிட்டால் விலை உயர்வை தவிர வேறு வழியில்லை



அதிகரிக்கும் செலவினங்களை தாங்கிக் கொண்டு

## தள்ளாடுகிறது இந்திய உணவுத் துறை

### விலையை உயர்த்தாமல் போராடுகிறோம்

(எஸ்.ஜீவராஜா)

கோலாலம்பூர், ஆக. 23-
பல்வேறு செலவுகளை தாங்கிக் கொண்டு சிரமங்களுக்கு மத்தியில் இந்திய உணவகத் துறை தத்தளிக்கிறது என்று மலேசிய இந்திய உணவக உரிமையாளர்கள் சங்கம் (பிரிமாஸ்) நேற்று கூறியது. இந்த நிலையிலும் உணவு விலைகளை அதிகரிக்காமல் போராடுகிறோம். ஆனால் வேறு வழியே இல்லை என்றால் அதை செய்வதை தவிர எங்களுக்கு மாற்று தீர்வுகள் கிடையாது என்று அச்சங்கத்தின் தலைவர் டத்தோ சுரேஷ் கோவிந்தசாமி தெரிவித்தார்.